பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

16 03 2024 **SATURDAY** 12 40 **PM**

வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. மக்கள் நலனுக்காக பல்வேறு வரலாற்றுச் சிறப்புமிக்க திட்டங்களை மத்திய அரசு நிறைவேற்றியுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. பிரதமரின் சூரிய மின்சக்தி இல்ல திட்டத்தின் கீழ், ஒரு கோடிக்கும் மேற்பட்டோர் பதிவு செய்துள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

3. உலக தமிழ் செம்மொழி மாநாடு, ஜூன் மாதம் சென்னையில் நடைபெறும் என்று தமிழக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

4. பிரஸார் பாரதியின் தலைவராக திரு. **Navneeth Sehgal** நியமிக்கப்பட்டுள்ளார்.

5. இந்தூர் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Shrivalli Rashmikaa Bhamidipaty** இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

>>>><<<<

பிஜேபி தலைமையிலான மத்திய அரசு கடந்த பத்தாண்டுகளில் மக்கள் நலனுக்காக பல்வேறு வரலாற்றுச் சிறப்புமிக்க திட்டங்களை நிறைவேற்றியுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இதுதொடர்பாக, நாட்டு மக்களுக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில், மகளிர் இடஒதுக்கீடு மசோதா நிறைவேற்றம், ஆயுஷ்மான் பாரத் திட்டம், பிரதமரின் வீட்டுவசதி திட்டம், சரக்கு மற்றும் சேவை வரி விதிப்பு முறை செயலாக்கம் உள்ளிட்டவை முக்கிய திட்டங்களில் அடங்கும் என்று குறிப்பிட்டுள்ளார்.

மக்கள் தம்மீது வைத்த நம்பிக்கையே இதுபோன்ற திட்டங்கள் நிறைவேற்றப்பட்டதற்கு காரணம் என்றும் அவர் கூறியுள்ளார்.

மக்கள் பங்களிப்புடனான செயல்திட்டங்களே ஜனநாயகத்தின் சிறப்பாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

துணிச்சலான முடிவுகளை மேற்கொண்டதற்கு மக்கள் அளித்த ஆதரவே காரணம் என்றும் அவர் கூறியுள்ளார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதற்கு தேவையான யோசனைகளை வழங்குமாறு பொதுமக்களை அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்தியாவை புதிய உச்சத்திற்கு கொண்டு செல்ல இந்த யோசனைகள் உதவிடும் என்று திரு. நரேந்திர மோடி அந்த கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

>>>><<<<

பிரதமரின் சூரிய மின்சக்தி இல்ல திட்டத்தின் கீழ், ஒரு கோடிக்கும் மேற்பட்டோர் பதிவு செய்துள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

நாடுமுழுவதும் இந்த திட்டத்தின் கீழ் இணைய விருப்பம் தெரிவித்து பொதுமக்கள் ஆர்வத்துடன் பதிவு செய்துள்ளதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

அஸ்ஸாம், பீகார், குஜராத், மகாராஷ்ட்ரா, தமிழ்நாடு மற்றும் உத்தரபிரதேசத்தில் 5 லட்சத்திற்கும் மேற்பட்ட பதிவுகள் செய்யப்பட்டுள்ளதாக அந்த செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கான பதிவு சம்மந்தப்பட்ட இணையதளத்தில் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் இதனை பொதுமக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

>>>><<<<

ஜம்மு காஷ்மீர் விடுதலை முன்னணியின் முஹமது யாசின் பிரிவை, சட்டவிரோத அமைப்பாக தடை செய்தது மேலும் ஐந்தாண்டுகளுக்கு நீட்டிக்கப்படுவதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா அறிவித்துள்ளார்.

சமூகவலைதளத்தில் இக்கருத்தினை பதிவு செய்துள்ள அவர், தடை செய்யப்பட்ட இந்த அமைப்பு தீவிரவாத செயல்களுக்கு தொடர்ந்து ஆதரவு அளித்து வருவதை அடுத்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் பாதுகாப்பு, ஒற்றுமை மற்றும் இறையாண்மைக்கு எதிராக யார் செயல்பட்டாலும், அவர்கள் மீது சட்டரீதியிலான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று அவர் கூறியுள்ளார்.

தீவிரவாத அமைப்புகளுக்கு ஆதரவு தருவோர், இரும்புக்கரம் கொண்டு ஒடுக்கப்படுவார்கள் என்றும் திரு. அமித் ஷா எச்சரித்துள்ளார்.

>>>><<<<

டிஜிட்டல் பொருளாதாரத்தில் இந்தியா முன்னணியில் உள்ளதாக மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

திருச்சியில் உள்ள இந்திராகாந்தி கல்லூரியில் புதுப்பிக்கப்பட்ட மகாத்மா காந்தி சிலையை இன்று திறந்து வைத்த பின்னர் மாணவிகளுடன் கலந்துரையாடுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

இந்திய தலைமைத்துவத்தின் கீழ் ஜி.20 உச்சிமாநாடு மக்கள் பங்களிப்புடன் வெற்றிகரமாக நடத்தப்பட்டதாகவும் திருமதி. நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

>>>><<<<

நிலக்கரி துறையில் உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவிப்பதற்காக பல்வேறு தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

சுயசார்பு இந்தியா இயக்கத்திற்கு வலுசேர்க்கும் வகையில், இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக நிலக்கரி துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கு ஊக்கத்தொகை வழங்கப்படுவதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>><<<<

அஸ்ஸாமில் 645 கோடி ரூபாய் மதிப்பிலான 10 நீர்வழி போக்குவரத்து திட்டங்களுக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

மத்திய அரசின் 100 சதவீத நிதியுதவியுடன் இந்த திட்டங்கள் செயல்படுத்தப்படவுள்ளதாக கப்பல் போக்குவரத்துத்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

>>>><<<<

தெலங்கானாவில் அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்தென மூன்று பேர் கொண்ட குழுவை, அம்மாநில அரசு ஏற்படுத்தியுள்ளது.

தெலங்கானா திட்ட வாரியத்தின் துணைத் தலைவர் திரு. **Chinna Reddy** தலைமையிலான இந்தக் குழுவில், ஓய்வு பெற்ற பேராசிரியர் திரு. கோதண்டராம் மற்றும் ஐஏஎஸ் அதிகாரி திருமதி. திவ்யா உறுப்பினர்களாக இடம்பெற்றுள்ளனர்.

>>>><<<<

உலக தமிழ் செம்மொழி மாநாடு, வரும் ஜூன் மாதம் சென்னையில் நடைபெறும் என்று தமிழக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், ஐந்து நாட்கள் இந்த மாநாடு நடைபெறவுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

>>>><<<<

பிரஸார் பாரதியின் தலைவராக திரு. **Navneeth Sehgal** நியமிக்கப்பட்டுள்ளார்.

பொறுப்பேற்கும் நாளிலிருந்து 3 ஆண்டுகளுக்கு அவர் இப்பதவியை வகிப்பார் என்று மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

>>>><<<<

மக்களவைத் தேர்தலுக்கான அட்டவணை இன்று பிற்பகல் 3 மணிக்கு வெளியிடப்படவுள்ளதாக தலைமை தேர்தல் ஆணையர் திரு. ராஜீவ்குமார் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெறவுள்ள இதற்கான செய்தியாளர் சந்திப்பின் போது, அட்டவணை வெளியிடப்படும் என்று அவர் கூறியுள்ளார்.

மக்களவைத் தேர்தலுக்கான அட்டவணையை வெளியிடும் நிகழ்ச்சியை அகில இந்திய வானொலி நேரடியாக ஒலிபரப்பு செய்கிறது.

இதற்கிடையே, மக்களவைத் தேர்தலில் 100 சதவீத வாக்குப்பதிவை உறுதி செய்யும் வகையில் பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகள் நாடுமுழுவதும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குறிப்பாக, முதல்முறை வாக்காளர்கள் வாக்களிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தும் வகையில் நடைபெற்று வரும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளில் மாணவர்கள் ஆர்வத்துடன் பங்கேற்று வருகின்றனர்.

தமிழகத்தின் மதுரையில் நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பங்கேற்ற மாணவர்கள், முதல்முறையாக வாக்களிக்கவுள்ளது தங்களுக்கு மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது என்று தெரிவித்தனர்.

(சவுண்ட் பைட் - மாணவர்கள் 39 செகண்ட்ஸ்)

இதேபோல் விருதுநகர் மாவட்டத்தைச் சேர்ந்த வாக்காளர்களும், முதல்முறையாக வாக்களிப்பதை ஆர்வத்துடன் எதிர்நோக்கியுள்ளதாக தெரிவித்தனர்.

(சவுண்ட் பைட் - மாணவர்கள் 50 செகண்ட்ஸ்)

>>>><<<<

மக்களவைத் தேர்தலின்போது மேற்குவங்கத்தில் ஊழல் மற்றும் வன்முறை நடைபெறாமல் இருப்பதற்கு தாம் முன்னுரிமை அளிக்கவுள்ளதாக அம்மாநில ஆளுநர் திரு. சி.வி. அனந்தபோஸ் கூறியுள்ளார்.

இன்று கொல்கத்தாவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தேர்தல் வன்முறைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும் என்றார்.

>>>><<<<

தேசிய கல்விக்கொள்கை அடுத்த தலைமுறையினருக்கு சிறந்த எதிர்காலத்தை உருவாக்க உதவிடும் என்று பிஜேபி மாநிலத் தலைவர் திரு. அண்ணாமலை கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், தேசிய கல்விக் கொள்கையின் அடிப்படையில் **PM SHRI** பள்ளிகளை தமிழகத்தில் தொடங்க மாநில அரசு முடிவு செய்துள்ளது, மகிழ்ச்சி அளிக்கிறது என்று குறிப்பிட்டுள்ளார்.

பல்துறை அறிவையும், பலமொழி புலமையையும், தொழிற்கல்வி திறனையும் ஒருங்கே பெறும் வகையில் தேசிய கல்விக் கொள்கை வடிவமைக்கப்பட்டுள்ளதாக திரு. அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

>>>><<<<

யுக்ரைனுக்கு எதிரான தாக்குதலை ரஷ்யா தீவிரப்படுத்தியுள்ளதை அடுத்து, **Sumy** மாகாணத்திலிருந்து பொதுமக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பப்பட்டு வருகின்றனர்.

கடந்த 3 நாட்களில் மட்டும் அந்த மாகாணத்தில் உள்ள 22 கிராமங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டுள்ளதாக யுக்ரைன் ராணுவம் தெரிவித்துள்ளது.

ரஷ்யாவின் இந்த தாக்குதல் காரணமாக 3 பேர் உயிரிழந்ததாகவும், 13 பேர் காயமடைந்ததாகவும் யுக்ரைன் கூறியுள்ளது.

>>>><<<<

மேற்குவங்கம், ஜார்கண்ட், ஒடிசா, சத்திஷ்கர் மற்றும் மத்தியப்பிரதேசத்தில் வரும் 20ஆம் தேதிவரை மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

சில பகுதிகளில் இடி மின்னலுடன் பலத்த காற்று வீசக்கூடும் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஜம்மு காஷ்மீர், லடாக் மற்றும் ஹிமாச்சலப் பிரதேசத்தில் வரும் 21ஆம் தேதி வரை பனிமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>><<<<

இந்தூர் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Shrivalli Rashmikaa Bhamidipaty** இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர் 6-3, 6-4 என்ற செட்கணக்கில் ரஷ்யாவின் **Polina Latcenko**-வை வென்றார்.

மகளிர் இரட்டையர் பிரிவில் **Vaidehi Chaudhari – Shrivalli Rashmikaa Bhamidipaty** இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

>>>><<<<

புதுதில்லியில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ராம்குமார் ராமநாதன் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

>>>><<<<

பாரிஸ் ஒலிம்பிக் **Taekwondo** ஆசிய தகுதிச் சுற்றுப் போட்டியில் இந்தியாவின் **Aman Kumar** காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

**>>>>END<<<<**